முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், சங்கரன்கோவில்,

**முன்னிலை : திருமதி.M.அலிமா, B.A.,L.L.M.,**

முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி,
சங்கரன்கோவில்.

2026 ஆம் ஆண்டு ஜீன் மாதம் 02 ஆம் நாள் செவ்வாய்கிழமை

**இடைநிலை மனு எண்.16/2026**

**in**

**அசல் வழக்கு எண்.294/2016**

1. ரத்தினம் (இறப்பு)
2. சேர்மக்கனி
3. மாடசாமி
4. காமராஜ்
5. வேலாயுத நாடார் (இறப்பு)
6. கடற்கரை மூப்பனார்
7. சுப்பையா நாடார்
8. மயில்வேல் முருகன்
9. தெய்வேந்திரன்
10. வைத்திலிங்கம்
11. நடராஜன்
12. சாந்தி
13. தமிழ்ச்செல்வி ...மனுதாரர்கள்/வாதிகள்

14. வள்ளியம்மாள்
15. முருகேஷ்வரி
16. ஈஸ்வரி
17. வேல்முருகன்
18. சின்னமணி ... 14 முதல் 18 மனுதாரர்கள்/
உத்தேச 14 முதல் 18 வாதிகள்

/எதிர்/

1. ஜெய ஸ்டெல்லா பிரிட்டோ
2. முருகையாசாமி
3. தெய்வக்கனி (இறப்பு)
4. செல்லத்துரை
5. கனகராஜ்

ALIMA M Digitally signed by ALIMA M Date: 2026.06.02 18:12:53 +0530

6. அருமைராஜ்
7. முருகேசன்
8. சமுத்திரக்கனி
9. செல்லப்பூ ... 1 முதல் 9 எதிர்மனுதாரர்கள்/
1 முதல் 9 பிரதிவாதிகள்

இம்மனுவானது 27.04.2026 தேதியன்று இந்நீதிமன்றத்தின் முன்பாக இறுதியான விசாரணைக்கு வந்தபோது, மனுதாரர்கள் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.S.புஷ்பராஜ் அவர்கள் ஆஜராகியும், 1, 2, 4 முதல் 9 எதிர்மனுதாரர்கள் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.F.X.யூஜின் அவர்கள் ஆஜராகியும், 3ம் எதிர்மனுதாரர் காலம்சென்றுவிட்ட நிலையிலும், 1, 2, 4 முதல் 9 எதிர்மனுதாரர்கள் தரப்பில் இம்மனுவிற்கு எதிருரை இல்லை என மேற்குறிப்பு செய்யப்பட்டுள்ள நிலையிலும், மனு மற்றும் அசல் வழக்கு கோப்பினை பரிசீலனை செய்தும், மனுதாரர்கள் தரப்பு வாத உரையை கேட்டறிந்தும், இதுநாள் வரையில் இந்நீதிமன்ற பரிசீலனையின் கீழ் இருந்து வந்த இம்மனுவில் இன்று இந்நீதிமன்றம் வழங்கும்,

**உத்தரவு**

இம்மனுவானது, மனுதாரர்கள் தரப்பில் உரிமையியல் நடைமுறை சட்டம் கட்டளை 22 விதி 3 மற்றும் பிரிவு 151–ன்படி, இவ்வழக்கில் இறந்துபோன 1ம் வாதியின் வாரிசுகளான 14 முதல் 18 மனுதாரர்களை இவ்வழக்கில் 14 முதல் 18 உத்தேச வாதிகளாக சேர்த்து வழக்கினை மேல்நடத்திக்கொள்ள அனுமதியளித்து உத்தரவிடக்கோரி தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

1) **மனுதாரர்கள் தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள மனுவின் சுருக்கம்** :–

மனுதாரர்கள் அசல் வழக்கில் வாதிகள் என்றும், பிராது தபசில் சொத்தை பொறுத்து வாதிகளாகிய மனுதாரர்கள் பிரதிவாதிகள் மீது விளம்புகை மற்றும் நிரந்தர ஏவுகட்டளை பரிகாரம் கோரி வழக்கு தாக்கல் செய்து மேற்படி வழக்கு நிலுவையில் உள்ள நிலையில் மேற்படி வழக்கில் 1ம் வாதி ரத்தினம் என்பவர் கடந்த 11.03.2026 தேதியன்று 14 முதல் 18 மனுதாரர்கள்/14 முதல் 18 உத்தேச வாதிகளை தனது வாரிசுகளாக விட்டுவிட்டு காலமாகிவிட்டார் என்றும், மேற்படியார்களை இவ்வழக்கில் 14 முதல் 18 மனுதாரர்கள்/14 முதல் 18 உத்தேச வாதிகளை கட்சி சேர்த்து வழக்கினை மேல்நடத்திப்போக வேண்டியது

ALIMA M
Digitally signed by ALIMA M
Date: 2026.06.02 18:13:01 +0530

அவசியமாயும், நியாயமாயும் உள்ளது என்றும், இல்லாவிடில் மனுதாரர்களுக்கு மிகுந்த கஷ்ட, நஷ்டம் ஏற்படும் என்றும், ஆகையால், இவ்வழக்கில் இறந்துபோன 1ம் வாதியின் வாரிசுகளான 14 முதல் 18 மனுதாரர்களை இவ்வழக்கில் 14 முதல் 18 உத்தேச வாதிகளாக சேர்த்து வழக்கினை மேல்நடத்திக்கொள்ள அனுமதியளித்து உத்தரவிடக்கோரி இம்மனு மனுதாரர்கள் தரப்பில் இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

2) இம்மனுவின் எதிர்மனுதாரர்கள் தரப்பில் No Counter என கற்றறிந்த வழக்கறிஞரால் மேற்குறிப்பு செய்யப்பட்டுள்ளது.

3) **தீர்வுக்குரிய பிரச்சனை:-**

இம்மனுவானது அனுமதிக்கப்படத்தக்கதா? என்பதேயாகும்.

4) மனுதாரர்கள் தரப்பில் தாக்கல் செய்யப்பட்ட மனு, அசல் வழக்கு கோப்பு மற்றும் மனுதாரர்கள் தரப்பு வாதஉரை ஆகியவைகள் பரிசீலனை செய்யப்பட்டன.

5) மனுதாரர்களால் இம்மனுவானது இவ்வழக்கில் இறந்துபோன 1ம் வாதியின் வாரிசுகளான 14 முதல் 18 மனுதாரர்களை இவ்வழக்கில் 14 முதல் 18 உத்தேச வாதிகளாக சேர்த்து வழக்கினை மேல்நடத்திக்கொள்ள அனுமதியளித்து உத்தரவிடக்கோரி இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

6) இம்மனுவின் மனுதாரர்கள் தரப்பில், இவ்வழக்கில் 1ம் வாதி ரத்தினம் என்பவர் கடந்த 11.03.2026 தேதியன்று 14 முதல் 18 மனுதாரர்கள்/14 முதல் 18 உத்தேச வாதிகளை தனது வாரிசுகளாக விட்டுவிட்டு காலமாகிவிட்டார் என்றும், மேற்படியார்களை இவ்வழக்கில் 14 முதல் 18 மனுதாரர்கள்/14 முதல் 18 உத்தேச வாதிகளை கட்சி சேர்த்து வழக்கினை மேல்நடத்திப்போக வேண்டியது அவசியமாயும், நியாயமாயும் உள்ளது என்றும் காரணம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

7) அசல் வழக்கின் முழுமையான நீதிமுறை தீர்மானிப்பிற்கு இறந்துபோன 1ம் வாதியின் வாரிசுகளான 14 முதல் 18 வரையுள்ள மனுதாரர்களை வாரிசுகளாக

ALIMA M

Digitally signed by ALIMA M
Date: 2026.06.02 18:13:10 +0530

கட்சி சேர்க்க வேண்டியது அவசியம் என்பதாலும், மேலும் இம்மனுக்களுக்கு எதிர்மனுதாரர்கள் தரப்பில் No Counter என மேற்குறிப்பு செய்யப்பட்டுள்ள காரணத்தினாலும், இம்மனுவானது நீதியின் நலன் கருதி அனுமதிக்கப்பட்டு இம்மனுவிற்கு இந்நீதிமன்றத்தால் தீர்வு காணப்படுகிறது.

8) **இறுதியாக:–**

இம்மனுவானது அனுமதிக்கப்படுகிறது. தரப்பினர்கள் தங்களது செலவுத்தொகையை தாங்களே ஏற்றுக்கொள்ளவேண்டும் என உத்தரவிடப்படுகிறது.

இந்த உத்தரவு என்னால் சுருக்கெழுத்தருக்கு சொல்லப்பட்டு, அவரால் நேரடியாக கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் பிழை நீக்கம் செய்யப்பட்டு, 2026 ஆம் ஆண்டு ஜீன் மாதம் 02ம் நாள் இந்நீதிமன்றத்தில் அவையறியப் பகரப்பட்டது.

ALIMA M
Digitally signed by ALIMA M
Date: 2026.06.02 18:13:17 +0530

முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி,
சங்கரன்கோவில்.

**இருதரப்பு சாட்சி மற்றும் சான்றாவணங்கள் :–** இல்லை –

ALIMA M
Digitally signed by ALIMA M
Date: 2026.06.02 18:13:25 +0530

முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி,
சங்கரன்கோவில்.

மு.மா.உ. நீதிமன்றம்,
சங்கரன்கோவில்,

I.A.No.16/2026
in
O.S.No.294/2016
உத்தரவு (Draft / Fair)

நாள் : 02.06.2026